RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1935

# அகநானூற்றில் திருமண முறையும் வாழ்வியல் அறமும்

**கு. பாலகிருஷ்ணன் [அ, *], க. நாகரத்தினம் [அ]**

[அ] தமிழ்த்துறை, டாக்டர்.எஸ்.என்.எஸ்.இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயமுத்தூர்-641049, தமிழ்நாடு, இந்தியா

# Marriage System and Life Morality in Akananuru

**K. Balakrishnan [a, *], K. Nagarathinam [a]**

[a] Department of Tamil, Dr.SNS Rajalakshmi College of Arts and Science (Autonomous), Coimbatore-641049, Tamil Nadu, India

* Corresponding Author: oohm651977@gmail.com

Received: 01-09-2022
Revised: 17-10-2022
Accepted: 29-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Tamil language is qualified as a good classical language among other languages. Sangam literature reveals the lifestyles and traditions of the ancient Tamil people. Ettuthogai and Pathupaatu in Sangam literature are divided in to internal and external literature in order to explain the social life. In that way, this article is a historical research on anthropological virtue. The culture of Tamil people is the best culture when compared to other culture. Marriage is one of the rituals and it was formed on the basis of social order. In the Sangam literature, the marriage system is in a position to realize the unique culture of the people. Marriage in Tamil Literature. In the works of Tamil literature there are many words for marriage such as 'Thirumanam', 'Varaivu', 'Vathuvai', 'Karppu'. Tolkappiyar mentions eight types of marriages in his book Tolkappiyam. Chastity is very important in Tamil marriage system. Hospitality, greeting the elders, marriage rituals play a very important role in Tamil marriages. But there are no priests in marriage ceremonies. But nowadays the marriage takes place with the priests who recites many mantras. Some traditional practices like, if a woman come forward with a pot filled with water then it is considered as good omen is still practiced today. Also, in marriages more importance to the women who have given birth to children. Thus, the article explores all these kinds of traditional system followed in marriages.

**Keywords:** Akananuru, Life Morality, Marriage System, Grammatical Literature

## முன்னுரை

உலகமொழிகளில் செம்மொழிக்கான முழுமையான தகுதிபெற்றிருக்கும் மொழி நம் தமிழ் மொழியாகும். தமிழ்மொழிக்கு மேன்மேலும் சிறப்பு சேர்த்து, பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் மரபுகளையும், வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியாக விளங்குவது சங்க இலக்கியமாகும். அத்தகைய சங்க இலக்கியமான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டில், சமூக வாழ்வியலை விளக்கும் வண்ணம் சங்கப்புலவர்கள் அக இலக்கியங்கள் மற்றும் புற இலக்கியங்கள் என பாகுபடுத்தப்பட்டு, அக இலக்கியங்களில் சங்க கால மக்களின் வாழ்வியலை களவியல், கற்பியல் என இருபெரும் பிரிவுகளாய் படம்பிடித்துக் காட்டுகின்றனர். அந்த வகையில் அக இலக்கியங்களில் ஒன்றான ‘அகநானூறில் திருமண முறையும் வாழ்வியல் அறமும்’ என்னும் தலைப்பிலான இந்தக் கட்டுரையானது மானுடவியல் அறம் தொடர்பாக வரலாற்று முறை ஆய்வாக அமைகின்றது. தமிழர்களின் பண்பாடு உலகில் தலைசிறந்த பண்பாடாகும். அப்பண்பாடுகளில் ஒன்றாக இடம்பெறுவது

திருமணம். சமுதாயத்தின் ஒழுங்கு முறையான அடிப்படையில் உருவானது திருமணம். சங்க இலக்கியத்தில் திருமண முறையானது நில அடிப்படையில் அம்மக்களின் தனித்த பண்பாட்டினை உணர்த்தும் நிலையில் உள்ளது. சென்னை திருமகள் நிலையப் பதிப்பகம் மூலம் வெளிவந்த அவர்களால் உரை செய்யப்பட்ட அகநானூறு, மூலமும் உரையும், என்னும் நூலை முதன்மையாகக் கொண்டு இதில் இடம்பெற்றுள்ள திருமணமுறையை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது (Ramasubramaniam, 2018). இந்த ஆய்வானது திருமணச் சடங்குகள் முதலானவை தமிழர் பண்பாட்டை ஆழமாகக் காட்டிநிற்கிறது என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது என்பதையும் அகநானூறில் இடம்பெறும் திருமணச் சடங்குகள் தொடர்பான சிந்தனைகள் தனி மனிதனுக்கும், கூட்டுத்தொகுதியாக வாழும் சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடுகளையும், ஒற்றுமையினால் உண்டாகும் மகிழ்ச்சியினையும் எவ்வாறு வெளிக்காட்டுகின்றது என்பதையும் ஆராயும் விதமாக இந்தக்கட்டுரை அமைந்துள்ளது.

## மணம் - வரையறை

தமிழ் இலக்கியங்களில் திருமணம் என்ற சொல் 'திருமணம்' 'வரைவு', 'வதுவை'. 'கற்பு' என பல பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தொல்காப்பியம் குறிப்பிடும் எண்வகை மணங்கள்:

திருமணம் பற்றி குறிப்பிடும் பொழுது தொல்காப்பியர் வடமொழியில் எட்டுவகைத் திருமணமுறைகள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். அதனை,

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்

துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்யே"

என்ற நூற்பாவின் வாயிலாக அறியமுடிகின்றது (Ilampuranar, 2005).

அவ்வெட்டுவகை மணங்களை எழுவகை திணைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிரம்மம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், ஆகிய நான்கும் பெருந்திணைக்குரியது. காந்தருவம் அன்பின் ஐந்திணைக்குரியது. அசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்றும் கைக்கிளைக்குரியது. இவ்வெட்டனுள் கூறப்பட்ட காந்தருவ மணமுறை மட்டுமே தமிழர்களின் மணமுறையாக அமைந்துள்ளது. இத்தகைய மணமுறையை களவு மணம், கற்பு மணம் என்று இருவகையாகப் பிரிக்கலாம்.

“திருமணம் என்ற நிறுவனம் குடும்பத்தைக் கட்டுக்கோப்பாக வைத்திருந்தது. ஒரு சமூகத்தின் அடிப்படை அலகாகக் குடும்பத்தை மாற்றி அமைத்ததிலும் திருமணத்திற்குத் தலையாய பங்கு உள்ளது” என்பர் (Josphine Punitha, 2015).

## களவு மணம்

களவு மணம் என்பது ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஊழ்வினை காரணமாக ஒருவரையொருவர் காணும்பொழுது காதல் வயப்படுவர். பிறகு, பெற்றோர் உற்றார், உறவினர்களுக்குத் தெரியாமல் மணமக்களாய் வாழும் முறையே களவு மணமாகும். இதனைத் தொல்காப்பியர்.

“ஒன்றே வேறே என்றிரு பால்வயின்

ஒன்றி உயர்ந்த பால தாணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப”

என்று குறிப்பிடுகின்றார் (Ilampuranar, 2005).

## கற்பு மணம்

கற்பு மணத்தை, 1) பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்வது, 2) பெற்றோர் சம்மதமின்றி திருமணம் செய்வது என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். தொல்காப்பியரும் இம்மணவினைத் தொடர்புடைய சடங்குகளைக் 'கரணம்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். பெற்றோர் சம்மதத்துடன் நடைபெறும் திருமணத்தைக்

"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குறி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (Ilampuranar, 2005)

என்றும், பெற்றோர் சம்மதமின்றி நடைபெறும் திருமணத்தை,

"கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே

புணர்ந்துடன் போகிய காலையான"

என்றும் தொல்காப்பியர் விளக்கம் தருகின்றார். இவ்வகைத் திருமணங்களுக்குச் இலக்கியங்களில் ஏராளமான பாடல்கள் சான்றுகளாக உள்ளன (Ilampuranar, 2005).

## அகநானூறில் திருமணச் சடங்குகள்

தமிழருக்கே உரிய திருமணச் சடங்குகளை அகநானூற்றுப் புலவர்களான விற்றூற்று மூதெயினனார் (136), நல்லாவூர்க்கிழார் (86), ஆகியோரது பாடல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

## நாளும் நிமித்தமும் பார்த்தல்

நல்ல பொழுதும் நன்னிமித்தமும் தமிழர் வாழ்வில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளன. எந்த ஒருசெயலைத் தொடங்கும் பொழுதும் புள்நிமித்தம் பார்த்தலும் கடவுளை வழிபடுதலும் இன்றளவும் உள்ளது என்பதை.

"மைப்பு அறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு

வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்

புள்ளுப் புணர்ந்து இனிய ஆகத்தெள ஒளி

அம்கண் இரு விசும்பு விளங்க திக்கட்

சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்துக்

கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்

படுமண முழவொடு பரூஉப் பணை இமிழ

முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇ " (Ramasubramaniam, 2018)

என்ற பாடலடிகளிலும்

"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை

பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரைகால்,

தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி,

மனை விளக்குறுத்து மாலை தொடரி

கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்

கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்

பேர் இல் கிழத்தி ஆக' எனத் தமர் தர"

என்ற பாடலடிகளின் மூலமும் தீயகோள்கள் நீங்கப்பெற்ற வெண்மையான திங்களைத் தீங்கற்ற உரோகிணி வந்து கூடுகின்ற, இருள் நீங்கப் பெற்ற காலைப்பொழுதே திருமணத்திற்கு ஏற்ற காலமாகக் கருதப்பட்டுள்ளது. அலங்காரம் செய்தல் திருமணத்தின் போது இல்லத்தையும் மணமகளையும் அலங்கரித்தல் என்பது இன்றுள்ள வழக்கமாக மட்டுமில்லாமல், சங்ககாலம் தொட்டு வழக்கிலிருந்து வருகிறது என்பதை நாம் அறிவோம் (Ramasubramaniam, 2018).

மணச் சடங்குகள் தொடங்குவதற்கு முன் வீட்டின் முன்பு பந்தல் அமைத்து, புதுமணல் பரப்பி பூமாலைத் தோரணங்கள் கட்டி, முரசுகள் முழங்கி விளக்கேற்றி இல்லத்தை அலங்கரித்தனர். மணமகளுக்குப் புத்தாடை அணியசெய்து பல்வேறு அணிகலன்களைக் கொண்டு அவளை அலங்கரித்துக் காப்பு நாண் கட்டுகின்றனர். இந்த நூலை கங்கணம்' என்ற பெயரில் மணமக்களுக்குக் கட்டும் வழக்கம் இன்றும் உள்ளது.

இதனை.

"காப்பு நாண்கட்ட கனாக்கண்டேன் தோழி"

என்று நாச்சியார் திருமொழியும் கூறுகின்றது (Ramasubramaniam, 2018).

## வாழ்த்தும் முறை

திருமணத்தில் வயது முதிர்ந்த பெண்கள் தங்களுடைய தலையில் நீர்க்குடத்தைச் சுமந்து கொண்டு கையில் மண்டை என்ற கலத்தை ஏந்தியவராய் ஒன்று கூடுகின்றனர். பின்பு முறையாக ச் செய்ய வேண்டிய சடங்குகள் அனைத்தையும் செய்து திருமணத்தை முடிக்கின்றனர். குழந்தைகளைப் பெற்றெடுத்த மங்கல மகளிர் நால்வர் கூடிநின்று கற்பினின்று வழுவாமல் நின் கணவனைப் பேணிக்காத்து வாழ்வாயாக என்று நீரோடு நெல்லும் மலரும் தூவி வாழ்த்தினர் என்ற செய்தியை,

"புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று

வாளிழை மகளிர் நால்வர் கூடிக்

"கற்பினின் வழாஅ நற்பல உதவிப்

பெற்றேற் பெட்கும் பிணையை ஆகென

நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி"

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன (Ramasubramaniam, 2018).

## உணவுமுறை

திருமணத்தில் முக்கியமான இடத்தைப்பெறுவது உணவே ஆகும். அக்காலத் திருமணத்தில் உழுந்துடன் சேர்த்துக் குழைய வெந்த பொங்கலையும், நெய்மிக்க வெண்மையான சோற்றினை இறைச்சியுடன் சேர்த்து பெருந்திரளாக வந்த அனைவரையும் உண்ணச் செய்தனர் என்பதை

"உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை

பெருஞ்சோற்று அமலை நிறப' (Ramasubramaniam, 2018)

"மைப்பு அறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு

வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்"

என்ற பாடலடிகளில் அறியலாம் (Ramasubramaniam, 2018).

## முடிவுரை

இதுவரை அகநானூறில் இடம் பெற்ற திருமணம் தொடர்பான வாழ்வியல் அறத்தின் வழி சங்ககாலத் தமிழர்களின் திருமணமுறைகளில் புரோகிதர்கள் இல்லை. தீவலம் வருதலுதம் இல்லை. ஆனால் தற்பொழுது அந்தணர்கள் மந்திரங்கள் ஓதி தீயினை வலம் வந்தே திருமணம் நடைபெறுகிறது. நன்நிமித்தம் பார்க்கும் வழக்கமும், நிறைகுடத்துடன் பெண்கள் எதிரில் வந்தால் நல்ல சகுனமாக க் கருதும் வழக்கமும் இன்றுவரை நடைமுறையில் காணப்படும் ஒரு நிகழ்வாகவே உள்ளது. மேலும், குழந்தைகளைப் பெற்ற சுமங்கலிப் பெண்களுக்கே திருமண நிகழ்வில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. பண்டையத் தமிழர்களின் திருமண விருந்தில் இறைச்சி உணவும் இடம்பெற்றிருந்ததை அறிய முடிகின்றது.

## References

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathigaram, Saradha Pathippagam, Chennai, India.

Josphine Punitha, A. (2015) Manidaviyal Nokkil Agathinai Marapukal, Agaram, Thanjavur, India.

Ramasubramaniam, V.T. (2018) Agananuru, Thirumagal Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License